செ.வெ.எண்.276/2009/செமதொஅ நாள்: 03.09.2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடும்ப அட்டைகள் 100 சதவீதம் சரிபார்க்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளில் போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து நீக்கம் செய்வதற்கும், புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் தொடர்பான புள்ளி விவரங்களை 100 சதவீதம் வீடு, வீடாக சென்று மறு ஆய்வு செய்து உரிய திருத்தங்கள் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் தல தணிக்கை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, குடும்ப அட்டைகளை வீடு, வீடாக சென்று சரிபார்த்து வருகின்றனர். இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறார்.

இன்று (03.09.2009) காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் திருவேகம்பன் தெரு, கீழ்அம்பி, திருபுக்குழி, வையாவூர் ஆகிய பகுதிகளில் குடும்ப அட்டைகள் சரிபார்க்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் வீடு, வீடாக சென்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது, “காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6.15 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. அரசு உத்தரவுப்படி போலி குடும்ப அட்டைகளை கண்டறிந்து நீக்கம் செய்வதற்கும், புழக்கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகள் தொடர்பான விவரங்கள் 100 சதவீதம் ஆய்வு செய்யும் பணி கடந்த 1.9.2009 முதல் நடைபெற்று வருகிறது. இதற்காக 1,312 தல தணிக்கை அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வீடு, வீடாக சென்று குடும்ப அட்டைகளை சரிபார்க்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த தல தணிக்கைக்குபின் போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் தகுதியான குடும்ப அட்டைகளுக்கு தேவையான அளவிற்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்க முடியும். திருவேகம்பன் தெருவில் உள்ள கூட்டுறவு நியாய விலைக்கடை காலை 10.00 மணிவரை திறக்கப்படவில்லை. அக்கடையின் விற்பனையாளர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. குடும்ப அட்டைகளை சரிபார்க்க வருகின்ற அலுவலர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். மேலும் தங்களின் குடும்ப அட்டைகளை அவர்களிடம் காண்பித்து தேவையான விவரங்களை அளித்திட வேண்டும்.” என கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பழனி, காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு.ஜோதி பிரகாசம், காஞ்சிபுரம் வட்ட வழங்கல் அலுவலர் திரு.வில்வம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.